

கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மங்களூரில் ரூ.8.50.கோடி மதிப்பீட்டில் புதிய தொழிற் பயிற்சி நிலையம் கட்டிடம் கட்டுவதற்கு தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் அடிக்கல் நாட்டினார்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம், திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி வழக்கறிஞர் அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் ஆர்.இராஜாவின் புதுமனை புகுவிழா நிகழ்ச்சியில் தமிழ்நாடு சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள் இதில் திருத்தணி எம்.பூபதி, கே.ஜெ.ரமேஷ், பிரபு கஜேந்திரன், சி.ஜெயபாரதி, ப.சிட்டிபாபு, ஜி.விமல்வர்ஷன், எஸ்.மகாலிங்கம், சி.சு.ரவிச்சந்திரன், பொன்.பாண்டியன், கே.சுரேஷ்குமார், காஞ்சிபடி சரவணன், மதுசூதனன், ஆ.பவளவண்ணன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### மதுரையில் நடைபெறும் முதலமைச்சர், கழகத் தலைவர் தலைமையில்

# ஜீன் 1 அன்று பொதுக்குழு கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்தினர் பங்கேற்பீர்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

கடலூர் மே 30 -

கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -



தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அண்ணன் தளபதி அவர்களின் தலைமையில் ஜூன் 1.6.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் மதுரை, உத்தங்குடி, “கலைஞர் திடலில்” நடைபெறவிருக்கும் பொதுக்குழு கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள்,

மாவட்ட, மாநகர இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட, மாநகர கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் பொதுக்குழு, சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தங்களுக்கு தலைமைக் கழகத்தில் இருந்து அனுப்பப்பட்ட கடிதத்தினை எடுத்து வந்து நமது மாவட்டத்தின் பெயர் பொறித்துள்ள கவுண்டரில் வைத்துள்ள ‘மினிட்’ புத்தகத்தில் கையொப்பமிட்டு தங்களுக்குண்டான ‘பேட்ஜ்’ஐ பெற்றுக் கொண்டு, காலை 8.00 மணிக்குள் பொதுக்குழு நடைபெறும் கூட்ட அரங்கத்திற்குள் நமது கடலூர் கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அமர்ந்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### ரூ.3.37 கோடி மதிப்பீட்டில்

# வடபழனி, ஆதிமூலப் பெருமாள் திருக்கோயில் திருப்பணிகள்!

### அமைச்சர் பி. கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை,மே.30-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (28.5.2025) சென்னை, வடபழனி, ஆதிமூலப் பெருமாள் திருக்கோயிலில் ரூ.3.37 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள திருக்கோயில் திருப்பணிகளை தொடங்கி வைத்தார்.



இந்து சமய அறநிலையத் துறை, தன் நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள தொன்மை வாய்ந்த திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல், இறையன்பர்கள் பயன்பெறும் வகையில் புதிய திட்டங்கள் மற்றும் சேவைகளை அறிமுகப்படுத்தி செயல்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகளை செயல்படுத்தி வருகிறது.

100 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயில்களில் ஒன்றான சென்னை, வடபழனி, அருள்மிகு ஆதிமூலப் பெருமாள் திருக்கோயிலுக்கு கடந்த 1960 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. இத்திருக்கோயிலுக்கு திருப்பணிகள் மேற்கொண்டு மீண்டும் குடமுழுக்கு நடத்திட தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, ஆணையரின் பொதுநல நிதி ரூ. 1.84 கோடி மற்றும் அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில் நிதி ரூ, 1.53 கோடி என மொத்தம் ரூ. 3.37 கோடி மதிப்பீட்டில் மூலவர் சன்னதி, தாயார் சன்னதி முன்புற கல் மண்டபம் அமைக்கும் பணிகள், திருக்கோயிலின் மூன்று புறங்களிலும் நுழைவுவாயில்கள் அமைத்தல், அலங்கார மண்டபம், வாகன மண்டபம் மற்றும் யாகசாலை கட்டுதல் போன்ற புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இத்திருப்பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ. கருணாநிதி, இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, திருக்கோயில் தக்கார் ல. ஆதிமூலம், இணை ஆணையர் திருமதி ஜ. முல்லை, மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, திருக்கோயில் துணை ஆணையர் இரா. ஹரிஹரன், மாநகராட்சி உறுப்பினர் கே.ஏழுமலை மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருப்பத்தூர் மாவட்டம் – ஜோலார்பேட்டை நகராட்சியில்

# படிப்பகம் திறப்பு- அங்கன்வாடி மையங்கள் அடிக்கல் நாட்டுதல்!

### மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திருப்பத்தூர், மே 30-

தமிழ்நாடு முதல்வர், கழக தலைவர் தளபதியார் அவர்களின் நல்லாட்சியில் பொதுப் பணிதுறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறுதுறை முகங்கள் அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலின்படி

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை நகராட்சிக்குட்ட அப்பாசி தெருவில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் படிப்பகம் திறப்பு விழாவிலும்,

பள்ளிகள் மேம்பாட்டு நிதியிலிருந்து வேலு செட்டி தெரு, நாராயணபுரம் ஆகிய பகுதிகளில் புதிய அங்கன்வாடி மையம் கட்டிடம் அடிக்கல் நாட்டு விழாவிலும்,

திருவண்ணாமலை நாடாளு மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கோவிந்தன் தெருவில் புதிய அங்கன்வாடி மையம் கட்டிடம் அடிக்கல் நாட்டு விழாவிலும்,

நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஜி.டி.நாயுடு தெருவில் தார்ச் சாலை அமைக்கும் பணியினையும் திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும்,ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தொடங்கி வைத்து சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் ஜோலார்பேட்டை நகர செயலாளர் ம.அன்பழகன், ஜோலார்பேட்டை நகராட்சி ஆணையர் பிரான்சிஸ் சேவியர், ஜோலார்பேட்டை நகர மன்ற தலைவர் காவியாவிக்டர், ஜோலார்பேட்டை நகர மன்ற து.தலைவர் இந்திரா பெரியார்தாசன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஆர்.சுதா, நகர கழக நிர்வாகிகள் மகேந்திரன், சுரேஷ், இனியன், சம்பத், நகர மன்ற உறுப்பினர்கள் ரசாத், வித்யா சுரேஷ், புன்னகை கமலசேகரன், மோகன்ராஜ், சிவக்குமார், மாலதிஇரமேஷ் பாபு, தேவராஜ், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் சி.எஸ். பெரியார்தாசன், பி.ஆர்.முகிலன், மோகன், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் கணேசன், வார்டு நிர்வாகி கள் தேவன், ராஜா, முனிசாமி, விமல், கார்த்திக், உமாதேவி. வினோத்குமார் மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

### மலேசியா தளபதி பேரவை சார்பாக

# கோலாலம்பூரில் கலைஞர் பிறந்தநாள் விழா!

கோலாலம்பூர், மே 30-

நவீன தமிழகத்தின் தந்தை. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின். பிறந்தநாளை. வருடா வருடம். மிகச் சிறப்பாக. மலேசியாவில். மலேசியா தளபதி பேரவை சார்பாக. கொண்டாடி வருகின்றோம். இந்த வருடமும். ஜூன் 3 ஆம் தேதி அன்று மிகச் சிறப்பாக கொண்டாட வேண்டும். என்று. ஜொகுர்.பாரில். நடந்த ஆலோசனைக் கூட்டம் செயலாளர்.ஹச்.எம். ஜெய்னுதீன், பொருளாளர் ஜே. சிவானந்தம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

மலேசியாவில் உள்ள. மலேசியா தளபதி பேரவை நிர்வாகிகள். மலேசியா முழுவதும் அன்னதானம். இனிப்புகள், முடிந்த நலத் திட்டங்கள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவது என்று முடிவு செய்யப்பட்டது.

அது போன்று தமிழகத்திலும் மலேசியா தளபதி பேரவை. நிர்வாகிகள். அன்னதானம் ஏழை எளிய மக்களுக்கு. உதவிகள் இனிப்புகள் வழங்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் புருஷோத்தமன். சாதிக் பாஷா. அன்புச் செல்வம். முகமது ரஃபி. வினோத். இளையராஜா.. செந்தில். அய்யனார். ஐஸ் அகமது. இர்பான். சபியா. ரேவதி. நூர்ஜகான். மற்றும் பலர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### பகுதிக் கழகச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. ஏற்பாட்டில்

# சைதை மேற்கில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

### 1000 பேருக்கு அசைவ உணவு – அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

சென்னை, மே 30-

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஜூன் 3 அன்று 102-வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்கு பகுதி திமுக சார்பில் பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி ஏற்பாட்டில், சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும், பதிமூன்றாவது மண்டலகுழு தலைவருமான இரா.துரைராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதைமா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., களக்காடி எல்லப்பன், ஆகியோர் முன்னிலையிலும், பகுதி துணை செயலாளர்கள் த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், பகுதி பொருளாளர் வி.பி.ஜானகிராமன், கலை இலக்கிய பகுத்தறிவுப்பேரவை மாநில துணை செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு ஆகியோர் வரவேற்பில் சைதாப்பேட்டை ஆலந்தூர் சாலையில் உள்ள சைதை மேற்கு பகுதி கழக அலுவலகத்தில் 03.06.2025 (செவ்வாய்க்கிழமை) நண்பகல் 12 மணியளவில் 1000 பேருக்கு அசைவ உணவை சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்.

எனவே இந்நிகழ்விற்கு சைதை மேற்கு பகுதிக்குட்பட்ட வட்ட கழக செயலாளர்கள், சை.மு.சேகர், அட்கோகமலநாதன், ந.தமிழரசு, எஸ்.பி. கோதண்டம், எம்.நாகா, அனைத்து அணிகளை சார்ந்த மாவட்ட அமைப்பாளர்கள் சைதைசாதிக்,

நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார், மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், டி.என். சிவமணி, பால்கார்ரவி, பொன்ஜெய்சிங், ஜி.கே. ராமச்சந்திரன், வி.மதிவாணன், ஆர்.ரவி, ஜி.பாபு, ஆர்.எல்.காந்தன், த.மணி, இளைஞர் அணி நிர்வாகிகள் ஜிம்.க.பிரபு, ம.சுகுமார், க.தீபன், இரா. சத்யா, இரா.வெங்கடேசன், எஸ்.பரத்குமார், எம். அருண், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம்.எஸ்.மணி, ஏ.சந்தோஷ், டி.எஸ்.ரவிச்சந்திரன், எம்.சம்மந்தம், டி. தியாகு, கு.கார்த்திகேயன், மாவுமில்ஸ்ரீதர், கேபிள்காளி, தீ. ராஜ்குமார், திடீர்நகர் தாஸ், எம். தீனதயாளன், அ. தமீம் அன்சாரி, வெ.புருஷோத்தமன், ச.தினகர், ஆர்ட்ஸ்குமார், எம்.மாறன், கே.பிரபு,

பிரஸ்கார்த்திக், வெ. கிஷோர்குமார், துரைராஜ், சிற்றரசு, நரேஷ்குமார், ரவீந்திரகுமார், ஆர். ஜி.ஸ்டாலின், எம்.ஜி.மதிவாணன், தமிழ்வேல், ஸ்டெல்லாமேரி, செல்வி, ராஜேஸ்வரி, செண்பகம், சுந்தரி, செல்வராணி, அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் ஆர்.எஸ். ரமேஷ், ஜி.ஜே.மோசஸ், ஆர்.ஜி.கற்பகம், எல்.கார்த்திக், எஸ்.மல்லிகா, கோயில் மணி, ஆட்டோஜான், சார்புசரவணன், வைரவமூர்த்தி, இரா.பாபு, பிடிசி. குமார், பூ.பாஸ்கர், த. ஜெயராமன், ஆர்.தனசேகரன், எஸ்.கோகுல்குமார், மாரியப்பன், விக்னேஷ், விவேக்செல்வம், ஆர். துரைராஜ், ஜீவபிரபாகரன், உள்ளிட்ட வட்டகழக நிர்வாகிகள், அனைத்து அணிகளை சார்ந்த பகுதி துணை அமைப்பாளர்கள், பாகபொறுப்பாளர்கள், பாககளப்பணியாளர்கள், கழக செயல்வீரர்கள், கழக முன்னோடிகள், உள்ளிட்ட கழக உடன்பிறப்புகள், பெருந்திரளாக பங்கேற்க உள்ளனர்.

### எல்சா 3 கப்பல் விபத்தால் கடலோர மாவட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய

# முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து தலைமைச் செயலாளர் ஆய்வு!

சென்னை, மே 30-

தென்மேற்கு பருவமழை தொடங்கிய நிலையில் கடந்த 24.05.2025 அன்று கேரளா கடற்கரையில் 38 கடல் மைல் தொலைவில் எல்சா 3 என்ற கப்பல் விபத்துக்குள்ளாகி அதிலிருந்த எரிபொருள், பிளாஸ்டிக் துகள்கள், ஆபத்தான பொருட்கள் கொண்ட பெட்டகங்கள் கடலில் விழுந்தது. வலுவடைந்த தென்மேற்கு பருவ மழையின் காரணமாக பிளாஸ்டிக் துகள்கள், பெட்டகங்கள் உட்பட பிற பொருட்கள் கேரள மாநிலத்தின் கடற்கரையிலும், கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்கு கடற்கரையிலும் கரை ஒதுங்கி வருகிறது.

இது தொடர்பாக இன்று, 29.05.2025 தமிழ்நாடு அரசு தலைமை செயலாளர் அவர்கள் தலைமையில் கடந்கரையில் ஒதுங்கும் பிளாஸ்டிக் துகள்கள் மற்றும் பிற பொருட்களை பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்துவது மற்றும் சுற்றுச் சூழலை பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

28.05.2025 அன்று பிளாஸ்டிக் துகள்கள் கன்னியாகுமாரி மாவட்டத்தின் மேற்கு கடற்கரையில் கரை ஒதுங்கியதாக தெரிவிக்கப்பட்ட உடன் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர்களுக்கும் மற்றும் தொடர்புடைய அனைத்து அரசு துறையினருக்கும் பிளாஸ்டிக் துகள்களை அப்புறப்படுத்துவதற்கான அறிவுரைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் வழங்கப்பட்டது.

மேலும், இக்கூட்டத்தில் பிளாஸ்டிக் துகள்கள் மற்றும் பெட்டகங்கள் வானிலை சூழலுக்கேற்ப நகரும் திசை மற்றும் கரை ஒதுங்கக்கூடிய பகுதிகள் குறித்து அறிவியல் வல்லுநர்களின் கருத்து கேட்டறியப்பட்டது. தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் பிளாஸ்டிக் துகள்களை அகற்ற தன்னார்வலர்கள் மூலம் பாதுகாப்பான முறையில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், காவல் துறை, தீயணைப்புத் துறை மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகளை ஒருங்கிணைத்து பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது என்றும், பாதுகாப்பு நெறிமுறைகள் குறித்து பொதுமக்களுக்கும் மீனவர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, இந்நிகழ்வின் சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த குறுகிய மற்றும் நீண்டகால ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் மற்றும் கால்நடை, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் மூலமாக மீன்கள் மற்றும் கடல் வாழ் உயிரினங்கள் மீதான தாக்கத்தினை கண்டறிய ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

பொதுமக்கள் மற்றும் மீனவர்கள் பிளாஸ்டிக் துகள்கள், பெட்டகங்கள் மற்றும் சந்தேகத்திற்குரிய பொருட்கள் கடலிலோ அல்லது கடற்கரையிலோ கண்டறியப்பட்டால் உடனடியாக மாவட்ட நிர்வாகத்திற்கும் காவல் துறைக்கும் தெரிவிக்க வேண்டும். தற்போதைய நிலவரப்படி எவ்வித ஆபத்தான பொருட்களும் தமிழக கடற்கரையில் ஒதுங்கவில்லை மற்றும் தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையம் சூழ்நிலையை தொடர்ந்து கண்காணித்து வருகிறது. மேலும் தமிழக அரசு பொதுமக்களின் உயிர் மற்றும் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது என்று தலைமைச் செயலாளர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் முனைவர் எம்.சாய்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், திருமதி பெ.அமுதா, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, திருமதி சுப்ரியா சாகு, கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, திருமதி சிஜி தாமஸ் வைத்யன், ஆணையர், பேரிடர் மேலாண்மை, மருத்துவர் என்.சுப்பையன், அரசுச் செயலாளர், கால்நடை, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, திரு.ராகுல்நாத், இயக்குநர், சுற்றுச்சூழல், கமாண்டென்ட், இந்தியக் கடலோரக் காவற்படை, மற்றும் அரசு உயர் அலுவலர்களும், தேசிய பெருங்கடல் தொழில்நுட்ப நிறுவனம், தேசிய கடலோர நிலைத்திட்ட மேலாண்மை மையம், தேசிய கடல் ஆராய்ச்சி மையம், அண்ணா பல்கலைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த அறிவியல் வல்லுநர்களும் கலந்து கொண்டனர்.



பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்றக் கூட்டம் மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் ரிப்பன் கட்டட மாமன்றக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார் , ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.